25th March 1964]

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார்: இப்போதுள்ள நியாய விலைக்கடைகளை, தற்போதைக்கு 31—3—1964 வரை நீடிக்கலாமென்று உத்தரவிடப்பட்டுள்ளது. இவைகளை மேலும் நீடிப்பதுபற்றி விலைவாசிப் போக்குகள், சப்ளை நிலைமை முதலியவற்றை வைத்துப் பரிசீலனை செய்து முடிவு எடுக்கப்படும்.

Improvements to Point Calimere

* 395 *Q.*—Sri K. A. MATHIALAGAN: Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) whether there is any proposal to make Point Calimere a Tourist Spot and to set up a Forest Research centre at that place; and

(*b*) if so, the present stage of the proposal?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார்: (அ) & (இ): கோடிக்கரையில் ஓர் ஓய்வு விடுதியைக் கட்ட உத்தேசம் இருந்தது. ஆனால், தேசீய நெருக்கடி காரணமாக அது பின்னர் கைவிடப்பட்டது.

திரு. கோ. சி. மணி: தேசீய நெருக்கடி முடிவதற்குள்ளாக எடுத்துக்கொள்ளவேண்டுமென்ற ஆலோசனை இனிமேலாவது அரசாங்கத்திற்கு வருமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார்: நான் மூலக் கேள்விக்கு பதில் சொன்ன மாதிரி இப்போது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது.

திரு. ம. கமலநாதன்: தலைவர் அவர்களே, கோடிக்கரையில் மஞ்சம்பட்டி பள்ளத்தாக்கில் காட்டு எருமை சரணாலயம் நிறுவும் உத்தேசம் உண்டா?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார்: அதற்குத் தனியாகக் கேள்வி போட்டால் பதில் சொல்லலாம்.

உத்தமபாளையத்திற்கு ஜில்லா முன்சீப் கோர்ட்

*396 **கேள்வி—திரு. மா. இராசாங்கம்:** கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

மதுரை மாவட்டத்திலுள்ள உத்தமபாளையத்தில் ஒரு ஜில்லா முன்சீப் கோர்ட்டு ஏற்படுத்த உத்தேசமுண்டா?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார்: இல்லை.

திரு. மா. இராசாங்கம்: என்னுடைய மூலக் கேள்வி உத்தமபாளையத்தில் தாலுகா முன்சீப் கோர்ட் ஏற்படுத்துவதைப்பற்றி இருந்தது. அது மாறி இருக்கிறது. இதிலே ஜில்லா முன்சீப்

[25th March 1964

கோர்ட் என்று இருக்கிறது. அங்கு ஏற்படுத்தவேண்டுமென்று நீதித் துறை சிபாரிசு இருந்தும் இன்னும் ஏற்படுத்தாத காரணம் என்ன என்று அறியலாமா?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றாடியார்: மதுரை மாவட்டத்திலுள்ள உத்தமபாளையத்தில் ஒரு ஜில்லா முன்சிப் கோர்ட்டு ஏற்படுத்த உத்தேசமுண்டா என்ற கேள்விக்கு நான் பதில் சொன்னேன்.

கனம் சபாநாயகர்: தாலுகா முன்சிப் கோர்ட் என்று கிடையாது. டிஸ்ட்ரிக்ட் முன்சிப் கோர்ட்டு என்றுதான் பெயர். தாலுகா தலைநகரில் இருக்கும்.

திரு. மா. இராசாங்கம்: நீதித் துறையிலிருந்து உத்தமபாளையத்தில் முன்சிப் கோர்ட் ஏற்படுத்தவேண்டுமென்று சிபாரிசு இருந்தும் தள்ளி வைத்திருப்பதன் காரணம் என்ன?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றாடியார்: எனக்கு இருக்கிற தகவலிலிருந்து நீதித் துறையிலிருந்து அந்த மாதிரி சிபாரிசு வந்ததாக இல்லை.

அரிசன ஆரம்பப் பள்ளிகளைப் பார்வையிடுதல்.

*397 கேள்வி—**திரு. சி. சிவசுப்பிரமணியன்**: கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்கு பதிலளிப்பாரா—

மாவட்ட அரிசன நல அதிகாரிகள் அரிசன ஆரம்பப் பள்ளிகளை பார்வையிடுவது என்பது உண்மையா?

கனம் திரு. பூ. கக்கன்: ஆம்.

பீங்கான் தொழிற்சாலை, விருத்தாசலம்

*398 கேள்வி.—**திரு. கி. நாராயணசாமி பிள்ளை**: கனம் கைத் தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) விருத்தாசலத்திலுள்ள பீங்கான் தொழிற்சாலையில் எத்தனை பேர் வேலை செய்கின்றனர்?

(இ) அவர்களுக்காக மொத்தம் எவ்வளவு தொகை சம்பளமாகக் கொடுக்கப்பட்டு வருகின்றது.

(உ) இத்தொழிற்சாலையில் வேலை செய்பவர்களுக்கு குடியிருப்பு, விடுதி வசதி செய்துகொடுக்க உத்தேசமுண்டா?

THE HON. SRI R. VENKATARAMAN: (*a*) The number of persons working in the Government Ceramic Centre, Vridhachalam is as follows :—

Daily paid workers—195.

Monthly paid staff (including officers, technical and non-technical and ministerial)—37.